# 2.5 இந்தப் புது வாழ்வு

**வேத வசனம்:** இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. 2கொரிந்தியர் 5:17

**அறிக்கை:** கிறிஸ்து இயேசுவுக்குள் நான் ஒரு புது சிருஷ்டி

**வேதப்பகுதி**
*லூக்கா 19:1-8*

**சத்தியம்:** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்துள்ளவர்கள் எவர்களோ அவர்கள் இருளிலிருந்து விடுதலையாகி ஒளிக்குள் வந்து விட்டனர். அவர்கள் இனிமேல் தங்களுக்காக அல்ல. மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவுக்காகவே வாழ்கின்றனர்.

## பாடக்குறிப்புகள்

* **மறுபடி பிறத்தலின் முக்கியத்துவம்**
  - *யோவான் 3:3-8*
* **கர்த்தருக்குள் ஒரு புது வாழ்வு உண்டு**
  - *2 கொரி. 5:17*
* **இனி வாழ்வது நான் அல்ல**
  - *கலா 2:20, யோவான் 3:7*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *(யோ. 3:5-6) மறுபடி பிறத்தல் என்றால் என்ன?*
- *மறுபடி பிறத்தல் என்பது எப்படி தன்னுடைய தெரிந்தெடுப்பு ஆகிறது?*
- *நம்முடைய முந்தைய வாழ்க்கையைக் காட்டிலும் பிந்தைய வாழ்க்கை எவ்வாறு வேறுபட்டதாக இருக்க வேண்டும், (கலா 2:20)*

## இருதயம், ஆத்துமா, மனம்

தேவனிடத்தில் நம் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு மனதோடும் அன்புகூற வேண்டும் என்று இயேசு சொன்னார். இது, நம் மனதால் தேவனை நேசிப்பதும் நம்முடைய தெரிந்தெடுப்புகளால் அவரைக் கனம் பண்ணுவதும் மற்றும் நம் செயல்களால் அவருக்குக் கீழ்ப்படிவதும் ஆகும். கீழ்க்காணும் ஒவ்வொரு படத்திற்குள்ளும் இவ்வாறு செய்வதற்குரிய வழியை எழுது அல்லது வரை.



**செயல்**

**நீ தவறு செய்த யாராவது ஒருவரிடம் நீயாகச் சென்று உன் வருத்தத்தைத் தெரிவி. அவர்களின் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு தேவனுடைய ஈவாகிய புதிய வாழ்வை ஆரம்பி.**

**சிந்திக்க:** *தேவனிடத்தில் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு மனதோடும் அன்புகூர்தல் என்றால் என்ன?*

______________________________

______________________________

**ஜெபம்:** *முழு மனதோடு அவரை நேசிப்பதற்குத் தேவனுடைய உதவியை நாடி ஒரு ஜெபத்தை எழுது.*

______________________________

______________________________